மாலை முரசு
பக்கங்கள் 21

## கூட்டமைப்பு இரங்கல்

தே.மு.தி.க. தலைவர் கப்டன் விஜயகாந்தின் மறைவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரங்கல் தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 12 வியாழக்கிழமை 28.12.2023 அதிர்வு 150






### ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வந்த

# 'கப்டன்' விஜயகாந்த் இன்று காலமானார்!

## முழு அரச மரியாதையுடன் நாளை இறுதிப் பயணம்





தென்னிந்தியாவின் பிரபல நடிகரும் சிறந்த அரசியல்வாதியும் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வந்தவருமான 'கப்டன்' விஜயகாந்த் இன்று காலமானார்.

விஜயகாந்த்துக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை நடைபெறவுள்ள அவரது இறுதிப் பயணத்துக்கு முழு அரச மரியாதை வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

சுகயீனமுற்றிருந்த அவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானதால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். 02▶

# ‘கப்டன்’ விஜயகாந்த்...




(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை மியாட் மருத்துவமனையில் வழக்கமான மருத்துவ பரிசோதனைக்காக நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்ட விஜயகாந்துக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானது.

அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதால் வெண்டிலேட்டர் உதவியுடன் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும், சிகிச்சை பலனின்றி அவர் இன்று காலை காலமானார்.

தென்னிந்தியாவில் பிரபல நடிகராக மட்டும் அல்ல சிறந்த அரசியல் தலைவராகவும் விஜயகாந்த் போற்றப்படுகின்றார். தமது சேவைகளால் மக்கள் மனதை அவர் வென்றவர்.

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் (தே.மு.தி.க.) தலைவரான விஜயகாந்த், தமிழக சட்ட சபையில் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். ஈழத் தமிழர்களுக்காகவும் அவர் குரல் கொடுத்து வந்தார்.

தமிழ்நாட்டின் மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 25 ஆம் திகதி அழகர்சாமி – ஆண்டாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் விஜயராஜ் என்கிற விஜயகாந்த். இவரின் மனைவி பெயர் பிரேமலதா. இவர்களுக்கு விஜய பிரபாகரன், சண்முக பாண்டியன் என இரண்டு மகன்கள் இருக்கின்றார்கள்.

### சினிமா பயணம்

தனது நண்பர்களின் உந்துதலின் பெயரிலும், தனக்கிருந்த ஆர்வத்தாலும் சினிமாவில் நடிப்பது என முடிவு செய்து சென்னைக்கு அவர் வந்தார். பல்வேறு அவமானங்கள், புறக்கணிப்புகளுக்கு மத்தியில், 1979ஆம் ஆண்டு எம்.ஏ.காஜாவின் இயக்கத்தில் வெளியான ஹஇனிக்கும் இளமை’ படத்தில் நடித்து, தன் திரைப் பயணத்தைத் தொடங்கினார். விஜயராஜ் என்ற தன் பெயரை விஜயகாந்த் என மாற்றிக்கொண்டார்.

சட்டம் ஒரு இருட்டறை, தூரத்து இடிமுழக்கம், அம்மன்கோவில் கிழக்காலே, உழவன் மகன், சிவப்பு மல்லி என வெற்றிப்படங்களைக் கொடுத்து தமிழின் முன்னணிக் கதாநாயகனாக வலம் வந்தார். கிட்டத்தட்ட 150 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்த விஜயகாந்த், 1984இல் மட்டும் ஒரே ஆண்டில் 18 படங்களில் நடித்து சினிமாத்துறையில் வரலாற்றுச் சாதனை புரிந்தார்.

1999ஆம் ஆண்டு நடிகர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் விஜயகாந்த். பல ஆண்டுகளாக அடைக்க முடியாமல் இருந்த நடிகர் சங்கக் கடனை சிங்கப்பூர், மலேசியா என தமிழர்கள் அதிகம் வாழும் வெளிநாடுகளில் நட்சத்திரக் கலை விழாக்கள் நடத்தி வட்டியும் முதலுமாக அடைத்தார்.

விஜயகாந்துக்கு யாரும் அறியாத எத்தனையோ பக்கங்கள் இருக்கின்றன. அதேபோல்தான் அவரின் தமிழ்மொழி மீதான பற்றும், தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டுமல்லாமல் ஈழத் தமிழர்கள் மீது கொண்ட பாசமும் காதலும் அளப்பரியது.


ஈழத்தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருந்த விஜயகாந்த்

### ஈழத்தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருந்த விஜயகாந்த்

விஜயகாந்த் தனக்கு 13 வயது இருக்கும்போதே மதுரையில் நடைபெற்ற 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டார் என்ற தகவலும் சொல்லப்படுகின்றது. சிறுவயதிலேயே தமிழ் மீது கொண்ட அந்தப் பற்றுதான் திரைக்கலைஞரான பின்னும் வளர்ந்து, தமிழர்களுக்காகப் போராடவும் தூண்டியது. குறிப்பாக, 1980 களின் பிற்பகுதியில் இலங்கையில் ஈழத் தமிழர்கள் மீது சிங்களவர்கள் புரிந்த கொடுரமானத் தாக்குதலில் ஏராளமான அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதைக் கண்டு கொதித்தெழுந்த விஜயகாந்த், ஈழத் தமிழர்கள் மீதானப் படுகொலையைக் கண்டித்து சக நடிகர், நடிகைகளுடன் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடத்தினார். அதுமட்டுமல்லாமல் இந்தப் படுகொலையை நிறுத்த வேண்டும், ஈழத் தமிழர்களுக்கு நீதி வேண்டும் எனக் கோரி அப்போதைய தமிழ்நாடு ஆளுநரிடம் மனுவும் அளித்தார்.

பின்னர், 1986ஆம் ஆண்டு இலங்கையில் ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதல் தொடர்ந்து அதிகரித்து வந்ததால், அதைத் தடுக்க வேண்டும் எனக் கோரி சென்னை வட்டாட்சியர்

04▶



# ஈழத்து இசைக்குயில் கில்மிஷாவுக்கு யாழ். மண்ணில் அமோக வரவேற்பு!

VIDEO

(எஸ்.நிதர்ஷன்)

தென்னிந்தியாவின் ஸீ தமிழ் தொலைக்காட்சி நடத்திய சரிகமப இசை நிகழ்ச்சியில் முதலாமிடம் பெற்று சாதனை படைத்த ஈழத்து இசைக்குயில் கில்மிஷா, பலாலியில் அமைந்துள்ள யாழ். சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்தை இன்று வந்தடைந்தார்.

இந்தியாவின் சென்னை விமான நிலையத்தில் இருந்து இன்று நண்பகல் வேளை கில்மிஷா தனது குடும்பத்துடன் நாடு திரும்பினார்.

இதன்போது பெருமளவான மக்கள், விமான நிலையத்தில் குவிந்திருந்து கில்மிஷாவை வரவேற்றனர்.

விமான நிலையத்தில் இருந்து வாகனத் தொடரணி மூலம் யாழ். நகருக்கு அழைத்து வரப்பட்ட கில்மிஷா, அங்கிருந்து அவரது சொந்த ஊரான அரியாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு கில்மிஷாவுக்கு கௌரவிப்பு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.











# யாழ். நகரில் இரு கடைகள் தீக்கிரை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் பெரிய கடை வீதியில் உள்ள இரண்டு கடைகள் நேற்று இரவு தீப்பற்றி எரிந்துள்ளன .

இதன்போது கடையில் இருந்த பெரும்பாலான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் தீப்பரவலைக் கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# 'கப்டன்' விஜயகாந்த்...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் உண்ணாவிரதம் இருந்தார் விஜயகாந்த். அவரின் இரசிகர் மன்றத்தின் சார்பாக தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பும் ஈழத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தது மட்டுமல்லாமல் தமிழ்நாடு முகாம்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த ஈழத் தமிழர்களுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்தார். குறிப்பாக, 1989 களில் மண்டபம் முகாம்களில் அகதிகளாக வசிப்பவர்களுக்கு நேரில் சென்று உதவி புரிந்தார்.

விஜயகாந்த் எல்லாவற்றுக்கும் ஒருபடி மேலே சென்று, ஈழத் தமிழர்கள் படும் இன்னல்களுக்காகத் தனது பிறந்த நாள் கொண்டாடுவதையே தவிர்த்தார். ஈழத் தமிழர்கள் அழும் போது, என்னால் கொண்டாட்டத்தில் இருக்க முடியாது" என்று ஈழத் தமிழர்களின் வலியை உணர்ந்தவராக உணர்ச்சி பூர்வமாகப் பதிலளித்தார். (பின்னாள்களில் அவரின் பிறந்த நாள் வறுமை ஒழிப்பு தினமாக அறிவிக்கப்பட்டு, ஏழைகளுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வந்தன).

### கப்டன் பிரபாகரன் - கப்டன் விஜயகாந்த்

ஈழத் தமிழர்கள் மீதான பற்றைப் போலவே, தனித் தமிழீழப் போராட்டத்தை முன்னின்று நடத்திய விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் மீதும் அளவு கடந்த அன்பையும் மரியாதையையும் கொண்டிருந்தார். அதன் சாட்சியாக தனது மூத்த மகனுக்கு விஜய பிரபாகரன் என்று பெயர் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதும், ஈழத்தின் மீதும் தனக்கிருந்த பற்றைப் பறைசாற்றினார். மேலும், தனது 100ஆவது படத்துக்கு வைத்த கப்டன் பிரபாகரன் என்ற பெயர்தான், அவரின் அடைமொழியாக நின்று இன்று வரை அனைவராலும் அன்போடு கப்டன் என அழைக்கப்படுகின்றார்.

2009 ஆம் ஆண்டில் ஈழ இனப்படு கொலை நிறுத்த வேண்டும் எனக் கோரி அவர் நடத்தியப் போராட்டங்கள் ஏராளம். கடல் கடந்த ஈழத் தமிழர்கள் மீதே அத்தனை பரிவு என்றால் கண்களோடு நிற்கும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் மீதான அவரின் காதலை சொல்லிமாளாது. 2002ஆம் ஆண்டு காவிரி நதிநீர் பிரச்சினை உச்சத்தில் இருந்தபோது, அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து நீர் தராத கர்நாடாகாவுக்கு மின்சாரம் இல்லை என்கிற முழக்கத்துடன் மாபெரும் போராட்டத்தை நெய்வேலிக்கே சென்று நடத்திக் காட்டினார்.

எல்லோரும் மாநிலம், மொழி கடந்து தனது திரைப்படத்தைப் பார்க்க வேண்டும், இரசிகர்களை அள்ளிக் குவிக்க வேண்டும் என எண்ணி தமது இரசிகர் மன்றப் பெயருக்கு முன்னால் அகில இந்திய என்ற முன்னொட்டை வலிந்து சேர்த்துக்கொள்வார்கள். ஆனால் விஜயகாந்தோ, தென்னிந்திய, அகில இந்திய என்றிருந்த தனது இரசிகர் மன்றத்தின் பெயரை 1982 இலேயே தமிழ்நாடு விஜயகாந்த் தலைமை இரசிகர் மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்தவர்.

விஜயகாந்த் தமிழர்கள் மீதும் தமிழர்கள் மீதும் கொண்ட பாசமும் பற்றையும் நினைவு கூர்ந்து, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களும் அவரின் இறுதி பயணத்தை கண்ணீர் ததும்ப உணர்ச்சியுடன் வழியனுப்பி வைக்கின்றார்கள்.

### முழு அரச மரியாதையுடன் இறுதிப் பயணம்

இதேவேளை, விஜயகாந்த்துக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்துக்கு முழு அரசு மரியாதை வழங்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:-

அன்பிற்கினிய நண்பர் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தலைவர் கப்டன் விஜயகாந்த் மறைவெய்திய செய்தி பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

நல்ல உள்ளத்துக்குச் சொந்தக்காரரான நண்பர் விஜயகாந்த் திரையுலகிலும் பொதுவாழ்விலும் தனது கடும் உழைப்பால் வெற்றிகரமான முத்திரைகளைப் பதித்த சாதனையாளர்.

நடிகராக, நடிகர் சங்கத் தலைவராக, அரசியல் கட்சித் தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக அவர் ஏற்றுக்கொண்ட பணி எதுவாக இருந்தாலும் அதில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தன்னைச் சார்ந்த அனைவருக்கும் உறுதுணையாக இருந்தவர்.

விஜயகாந்த்துக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்துக்கு முழு அரசு மரியாதை வழங்கப்படும். - என்றுள்ளது.

### கூட்டமைப்பு இரங்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார்.

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவர் கப்டன் விஜயகாந்தின் மறைவால் துயருறும் நம் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள் என்று அந்த இரங்கல் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



VIDEO

## இந்திய மீனவர்கள் அத்துமீறல் விவகாரம்:

# யாழ். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் - எம்.பிக்கள் வாக்குவாதம்





(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான இறுதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத் தலைவர் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோரின் தலைமையில் இந்தக் கூட்டம் இடம் பெற்றது.

யாழ். மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், மாவட்டத்தின் முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், முப்படைகளின் பொறுப்பதிகாரிகள், பொலிஸார் எனப் பல்வேறுபட்ட துறைசார்ந்தவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறல் விவகாரம் தொடர்பாகப் பேசப்பட்ட போது கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையே தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது ஒரு கட்டத்தில் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களை விமர்சித்து உரையாற்றிக் கொண்டிருந்த நபர் திடீரெனக் கூட்டத்துக்கு நடுவே வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வந்ததால் நிலைமை கட்டுக்குள் வந்தது.

அமைச்சர் டக்ளஸ், கட்சி ஆதரவாளர்களை அழைத்து கட்சி கூட்டத்தை நடத்துகின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

எனினும், அமைச்சர், மேற்படி நபர் பொது அமைப்பைச் சேர்ந்தவர் என்று தெரிவித்து சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மீண்டும் ஜனாதிபதியாக ரணிலையே மக்கள் தெரிவு செய்வார்கள்

## மன்னாரில் இராஜாங்க அமைச்சர் சாமர தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

"நாட்டில் ஏற்பட்டுள்ள கஷ்டத்தைப் போக்கியது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. எனவே, எனது ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கே. அவரின் செயற்பாட்டாலேயே நாடு தற்போது முன்னேறி வருகின்றது."

– இவ்வாறு ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

மன்னார்உப்பு உற்பத்தி நிறுவனப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வருடாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று மாலை உப்பு உற்பத்தி நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர் ஒருவரை ஜனாதிபதியாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். அது முடியாத காரியம். தமிழர் ஒருவர் எவ்வாறு ஜனாதிபதியாக வர முடியும்? ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய எத்தனை வாக்குகள் தேவை?தமிழர்களின் வாக்குகள் எத்தனை உள்ளன?

அதிகமானவர்கள் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே தெரிவு செய்வார்கள்.

கடந்த காலங்களில் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினை மக்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, மக்கள், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவார்கள்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மறைந்தார் 'கறுப்பு எம்.ஜி.ஆர்.'

தமிழகத்தின் மற்றொரு அரசியல் ஆளுமை சரிந்திருக்கின்றது.

தேசிய முற்போக்குத் திராவிடக் கழக தலைவர் கப்டன் விஜயகாந்த் உலகை விட்டு விடை பெற்று விட்டார்.

தமிழுணர்வும் தாராள மனமும் கொண்டவர். திரையுலகிலும் அரசியலிலும் பொது வாழ்விலும் முத்திரை பதித்தவர். தமிழகத்தில் எதிர்க்கட்சித் தலைவராக திகழ்ந்தவர். தமிழக அரசியலில் கொடி கட்டிப் பறந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சட்டமன்றத்திலும் வெளியிலும் துணிச்சலாக எதிர்த்து நின்ற மற்றொரு ஆளுமையாளர்.

தமிழகத்தின் மிகப்பெரிய ஆளுமையான மக்கள் திலகம் எம்.ஜி.இராமச்சந்திரனுடன் பல விடயங்களில் ஒப்பிட்டுத் தம்பியாகப் பேசப்படுபவர்.

'கறுப்பு எம்.ஜி.ஆர்.', 'சொக்கத்தங்கம்', 'பொன்மன வள்ளல்' என்றெல்லாம் போற்றப்பட்டவர்.

ஏழைகளுக்கும் கஷ்டப்பட்டவர்களுக்கும் உதவுவதில் எம்.ஜி.ஆரின் வழி நின்ற தமிழகத் தலைவர் அவர் மட்டுமே.

எம்.ஜி.ஆர். வழியில் அவர் ஆற்றிய இன்னொரு அரும்பணி இந்தச் சமயத்தில் எண்ணி விதைந்துரைக்கப்பட வேண்டியது.

ஈழத் தமிழர்களுக்காக உண்மையாக உணர்வெழுச்சியுடன் செயற்பட்ட மற்றொரு எம்.ஜி.ஆர். அவர்.

இருவருமே தங்கள் அரசியல் விருப்பு - வெறுப்புகளுக்கு அப்பால் நின்று, ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை முழு மூச்சாக ஆதரித்து, அதற்கு முன்னுரிமை கொடுத்து, மதிப்பளித்து செயற்பட்டவர்கள்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் உந்துசக்தியாகவும், முக்கிய கட்டங்களில் மூல வளமாகவும் திகழ்ந்தவர் எம்.ஜி.ஆரே. சர்வதேசத்தையும் அதிர வைக்கும் விதத்தில் ஈழத் தமிழர்களின் - விடுதலைப் புலிகளின் - சுதந்திர விடுதலைப் போராட்டம் உச்சமடைந்தது என்றால் அதற்கு பிரதான காரணங்களில் ஒன்று தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரின் பின்புல ஆதரவும், ஆசீர்வாதமும், முழு உதவி ஒத்துழைப்புமே என்பது மறுக்க - மறக்க - மறைக்க - முடியாத உண்மை.

அதுபோன்று இல்லாவிட்டாலும் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை உணர்வும் உயிருமாய் உளப்பூர்வமாய் ஆதரித்து நின்றவர் 'கறுப்பு எம்.ஜி.ஆர்.' விஜயகாந்த்.

அவரது நூறாவது படத்துக்கு பெயர் 'கப்டன் பிரபாகரன்'தான். அந்தப் படத்தில் நடித்த பின்னர்தான் அவரது ஆதரவாளர்கள், ரசிகர்கள் அவரை 'கப்டன்' விஜயகாந்த் என்று அன்புரிமையுடன் அழைக்கத் தொடங்கினர்.

தனது மூத்த மகனுக்கு விஜய் பிரபாகரன் என்று பெயர் சூட்டியவர் விஜயகாந்த். ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் மீது அவருக்கு இருந்த ஈடுபாட்டின் - ஆதரவின் - பக்தியின் - வெளிப்பாடு இது எனலாம்.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு சரியாக இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தவர் விஜய் பிரபாகரன். அச்சமயத்தில் புலிகளுடன் தங்களை அடையாளப்படுத்துவதற்கு தமிழக அரசியல் தலைவர்கள் அஞ்சி விலகி நின்ற சமயம் தன் மகனுக்கு பிரபாகரனின் பெயரைச் சூட்டித் தனது உள்ளத்தை வெளிப்படுத்தியவர் நடிகர் விஜயகாந்த் என்பது கவனிக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் ஒரு சமயத்தில் முதல்வர் ஜெயலலிதாவுடன் அரசியல் ரீதியில் கைகோர்த்த தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், குறுகிய காலத்தில் அந்த உறவை முறித்துக் கொண்டு ஜெயலலிதாவுக்கு அரசியல் எதிரியானார். ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் மற்றும் விடுதலைப் புலிகள் தொடர்பாக ஜெயலலிதா எடுத்த மோசமான நிலைப்பாடும் கூட விஜயகாந்தின் இந்த முரண்பாட்டுக்கு பிரதான காரணங்களில் ஒன்று என அரசியல் விமர்சகர்கள் அச்சமயம் கூறிவந்தமையும் கவனிக்கப்பட வேண்டும்.

'மறைந்த கப்டன் விஜயகாந்த் மக்களின் பசிப்பிணி தீர்த்த பொன்மன வள்ளல் என்று அஞ்சலி செலுத்துவோம்' - என இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விடுத்த செய்தி குறிப்பும் கவனிக்கத்தக்கது.

ஈழத் தமிழர்கள் தமிழகத்தில் தங்களுக்காக உணர்வுபூர்வமாகச் செயற்பட்ட ஒரு சகோதரனை இழந்திருக்கின்றார்கள். அவருக்கு நமது அஞ்சலிகள்.

# கல்முனை மஹ்மூத் மகளிருக்கு மடிக் கணினி

(அஸ்ஹர் இப்றாஹிம்)




கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) உயர்தர உயிரியியல் பௌதீக விஞ்ஞான பிரிவின் தேவையின் பொருட்டு 'பல்கீஸ் யூசுப் ஹமீட் அறக்கட்டளை' நிதி உதவியுடன் கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸிடம் மடி கணினி அன்பளிப்பு செய்யப்பட்டது.

உயர்தர உயிரியியல் பௌதீக விஞ்ஞான பிரிவின் செயற்பாட்டை மேம்படுத்தல், தகவல் சேகரித்தல் மற்றும் இலத்திரனியல் முறையில் தகவல் பரிமாற்ற சேவையை இலகுபடுத்தும் நோக்கில் அதிபரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாகவே மடிக் கணினி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இதற்கான பிரதான அனுசரணையாளராக இந்தக் கல்லூரியின் ஸ்தாபக அதிபர் ஏ. ஹமீட்டின் புதல்வியான பிரதி அதிபர் ஏ.எச். நதீரா தலைமையில் இயங்கும் 'பல்கீஸ் யூசுப் ஹமீட் அறக்கட்டளை' மூலம் மடிக் கணினி வழங்கப்பட்டது.





# ஓட்டோவில் பாண் விற்றவரிடம் மதுபானம், ஐஸ் போதை மீட்பு!

மிரிஹான பிரதேசத்தில் ஓட்டோவில் பாண் விற்பனை செய்வதுடன் போதைப் பொருள் விற்பனை செய்தார் என்று சந்தேகிக்கப்படும் நிலையில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 37 ஆயிரம் லீற்றர் சட்டவிரோத மதுபானம், ஆயிரத்து 200 மில்லி கிராம் நிறையுடைய ஐஸ் போதைப் பொருள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மிகவும் தந்திரமான முறையில் ஓட்டோவின் பின்புறத்தில் போதைப் பொருட்களை மறைத்து வைத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பிரான்ஸ் வாழ் தமிழ் வர்த்தக சங்கத்தால் உணவுப் பொருள்கள் வழங்கி வைப்பு!

(பழுவூரான்)

பிரான்ஸ் வாழ் தமிழ் வர்த்தக சங்கத்தின் ஒரு மில்லியன் ரூபா நிதி அனுசரணையில், மட்டக்களப்பில் வெள்ளத்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கோராவளி கிராமத்தில 62 பொதிகளும், பேரிலாவெளி கிராமத்தில் 47 பொதிகளும், திகிலிவெட்டை கிராமத்தில் 66 பொதிகளும் மொத்தமாக 175 குடும்பங்களுக்கு இந்த 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் அந்தந்த கிராம சேவகர்களின் உதவியுடன் வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வு கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலர்ராஜ்பாபுதலைமையில் லோ.தீபாகரனின் ஒருங்கிணைப்பில் பொருளாதார உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் உதவியுடனும் இடம் பெற்றது.



# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற திருவாசக விழா!

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த திருவாசக விழா சந்நிதியான் ஆச்சிரமத்தில் செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்றது.

முதல் நிகழ்வாகச் செல்வச்சந்நிதியான் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவங்களும், திருவாசக ஏடுகளும் ஆலயத்திலிருந்து தேவார பாராயணத்துடன் ஆச்சிரமத்துக்கு எடுத்து வரப்பட்டே அங்கு நிகழ்வுகள் இடம்பெற்றது.

இதில் அறிமுகவுரையைச் சொல்லின்செல்வர் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்தினார். கலைநிகழ்வுகளாக சிறுப்பிட்டி நாகதம்பிரான் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம் இடம் பெற்றது.சிறப்புச் சொற்பொழிவை உளவள துணையாளர் நா.நவராஜா நிகழ்த் தினார்.

திருவாசக பண்ணிசையை இசை நாவரசு அ.எ.பிரதீபன் வழங்கினார். இதில் அணிசேர் கலைஞர்களாக ஹார்மோனியம் – இசைசுரபி என்.செல்வச்சந்திரன், புல்லாங்குழல் இசை யினை நாதவினோதன் மு.தேசிகன், மிருதங்கம்– நாதமணி – ஆ.லோகேந் திரன், கெஞ்சிரா– வித்வான் என். கேதாரநாத்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தின் பூஜாரி பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கரியாலைநாகபடுவான் கிழக்கு, கரியாலை நாகபடுவான் மத்தி, குமுழமுனை ஆகிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன சுவாமிகளால் வழங்கப்பட்டன.









# ஹட்டன் பன்மூர் தமிழ் மஹா வித்தி. பழைய மாணவர்கள் ஒன்று கூடல்

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் பன்மூர் தமிழ் மஹா வித்தியாலய பழைய மாணவர்கள் 'பாட சாலையில் வேர்களைத் தேடி' எனும் தொனி பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட பழைய மாணவர்கள் ஒன்று கூடல் நிகழ்வு பிரமாண்டமான இன்னிசைச் சங்கமத்துடன் இடம்பெற்றது.

96 வருடங்களைக் கடந்த பன்மூர் தமிழ் மஹா வித்தியாலய வரலாற்றின் கல்வியை விதைத்த எம் மூத்த அதிபர், ஆசிரியர்களை தேடி அழைத்து அவர்களின் சேவையை கௌரவித்த ஒரு வரலாற்றை திருப்பிப் பார்த்த நிகழ்வாக இது இடம்பெற்றது.

எமது பன்மூர் பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவ ஒன்று கூடலானது பல தரப்பினரை கொண்டு செயற் படுத்தப்பட்டது.

பழைய அதிபர், ஆசிரியர்களை வரவேற்று அவர்களுக்கு நினைவு சின்னங்களுடனான கௌரவமளித்தனர்.

தமிழ் மஹா வித்தியாலய பழைய மாணவர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், பொலிஸார், பெற்றோர், கிராம உத்தியோகத்தர் சமூக நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.







# முன்பள்ளியின் ஆண்டுவிழா

(எஸ். சினீஸ் கான்)

மூதூர் அல்-மினா முன்பள்ளி பாலர் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அல்-மினா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (26) நடைபெற்றது.

மூதூர் அல்-மினா முன்பள்ளி பாலர் பாடசாலை ஆசிரியையின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் முன்பள்ளி இணைப்பாளர் பெளமி, பாடசாலையின் அதிபர் றசீம், பிரதி அதிபர் நிஸார் மௌலவி, முன்பள்ளித் தலைவர் சாதிக், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்று மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.பிரதம அதிதியால் பாடசாலைக்கு உதவிகளும் வழங்கப்பட்டன.



# பதுளை, குருத்தலாவ முஸ்லிம் கல்லூரி நூற்றாண்டு விழாவில் ஜனாதிபதி ரணில்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பதுளை குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா நேற்று (27) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்து கொண்டார்.

பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமையை வெளிப்படுத்திய மாணவர்கள் மற்றும் பொதுப்பரீட்சைகளில் அதியுயர் சித்திபெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதியால் விருதுகள் வழங்கப்பட்டன.













# பேருவளையில் இடம்பெற்ற சர்வதேச அரபு மொழி தினம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சர்வதேச அரபு மொழி தின விழா பேருவளை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் அதிபர் இப்ராஹீம் தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் விசேட அதிதியாக் கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலை அபிவிருத்திப் பகுதியின் பணிப்பாளர் நிஸாமுதீன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், கௌரவ பேச்சாளராக ஜாமிஆ நளீமிய்யாவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி) கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அதிகாரி அஷ்ஷெய்க் எம்.எம்.எம். முப்தி மற்றும் வை.எம்.எம்.ஏ உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை உறுப்பினர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள் உட்பட களுத்துறை மாவட்ட பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர்.








# உதவிப் பிரதேச செயலருக்கு இடமாற்றப் பிரியாவிடை

(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலராகப் பணிபுரிந்த கந்தவனம் சதிசேகரன் 01.01.2024 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் லாகுகல பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்.

இடமாற்றலாகும் காரைதீவைச் சேர்ந்த கந்தவனம் சதிசேகரனுக்கான பிரியாவிடை நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலர் த.கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

அவரது இடத்துக்கு உதவி பிரதேச செயலராக பெரிய நீலாவணையைச் சேர்ந்த திருமதி சீனிவாசகம் நிருபா நியமிக்கப்பட்டுள்ளார்.




# எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் 75 ஆவது ஆண்டில் முத்திரை வெளியீடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தெல்தோட்டை, எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் 75 ஆவது ஆண்டு பவளவிழாவை முன்னிட்டு தபால் திணைக்களத்தால் தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் முத்திரை வெளியீடு நிகழ்வு ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.

வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த இந்த நிகழ்வில் உத்தியோக பூர்வமான முத்திரை கல்லூரி அதிபர் மற்றும் பொலிஸ் திணைக்கள உத்தியோஸ்தர்க ளுக்கு வழங்கப்பட்டது.




# சாய்ந்தமருதில் பட்டமளிப்பு விழா!

(ஏ.எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது தாறுள் இல்மு கல்லூரியின் வருடாந்த பட்டமளிப்பு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் நேற்று புதன்கிழமை (27) நடைபெற்றன.

கல்லூரி முதல்வரும் கல்முனை கல்வி வலய ஆசிரிய ஆலோசகருமான ஆதம்பாவா றாஸிக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாஸா, எல்.சி.பி.சி. நிறுவன பணிப்பாளர் எம்.ஏ.சி. எம்.ஜவாஹிர் மற்றும் ஐ.சி.ஏ.எம். அபாகஸ் நிறுவன பணிப்பாளர் றீ.எம். ஷாபி ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆங்கில எலகியூஸன், சிங்கள எலகியூஸன், சதுரங்கம், அபாக்கஸ் போன்ற பாடநெறிகளின்





இறுதிப் பரீட்சைகளில் சித்தியெய்திய சுமார் 225 மாணவர்கள், விருதுகள், பதக்கங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தியாவில் சென்னையில் நடைபெற்ற சர்வதேச அபாக்கஸ் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்ற மூன்று மாணவர்கள் உட்பட நான்கு மாணவர்களும் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற அபாக்கஸ் 7 ஆவது தேசிய மட்டப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் மற்றும் ஆறுதல் பரிசையும் வென்ற 38 மாணவர்களும் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

அபாக்கஸ் பாடநெறியின் 5 மட்டங்களையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த 17 மாணவர்களுக்கான பட்டமளிப்பும் இடம்பெற்றது.





# வருவாய் குறைந்த குடும்பங்களது மாணவருக்குக் கற்றல் உபகரணம்

(அஷ்ரப் ஏ சமத்)

ஏ.ஜே.எம். முசம்மில் பவுண்டேசன் ஆதரவில் 28 ஆவது வருடமாக காந்தா சவிய பெண்கள் அமைப்பின் தலைவி பெரோஸா முஸம்மில் தலைமையில் கொழும்பு மாநகரில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 1000 பேருக்கு அப்பியாச புத்தகங்கள், உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கொழும்பு மாநகர புதிய மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முசம்மில், பெரோசா முசம்மில் தலைமையிலான காந்தா சவிய உறுப்பினர்கள், பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கொழும்பு வாழ் பாடசாலை மாணவிகளின் கலை நிகழவுகளும் இடம்பெற்றன.



# மன்னார் தோட்ட வெளியில் இராணுவத்தின் கிறிஸ்மஸ்!

(மன்னார் நிருபர்)

மன்னார் தள்ளாடி 54 ஆவது இராணுவ படைப்பிரிவு ஏற்பாடு செய்த நத்தார் கரோல் நிகழ்வு நேற்று புதன்கிழமை(27) இரவு 7 மணியளவில் மன்னார் தோட்டவெளி புனித வேத சாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினராக இராணுவத்தின் வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தினேஷ் நானயக்கார, மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.கனகேஸ்வரன் உட்பட பிரதேச செயலர் கள், திணைக்களத் தலைவர்கள், அருட் தந்தையர்கள் உள்ளடங்களாக ஆயிரக் கணக்கான மக்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு இராணுவத்தின் இசைக்குழுவின் கரோல் கீதங்கள் இசைக்கப்பட்டன. மேலும் மன்னார் மாணவர்களின் கரோல் கீதங்களும் இசைக் கப்பட்டன.

கரோல் கீதங்கள் இசைத்த பாடசாலை மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வைக் கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினால் வான வேடிக்கை நிகழ்வும் முன்னெடுக்கப் பட்டது.











# நுவரெலியா கந்தப்பளையில் தொடர் மழையால் வெள்ளம்!

(மஸ்கெலியா நிருபர்,
(தலவாக்கலை நிருபர்)

நேற்று புதன்கிழமை இரவு முதல் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக நுவரெலியா கந்தப்பளை பகுதியில் உள்ள தாழ் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. பல ஏக்கர் விவசாய நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்த நிலையில் நேற்று புதன் கிழமை (27) இரவு பெய்த கன மழை காரணமாக உடப்பு சல்லாவ, நுவரெலியா ஊடான போக்குவரத்து தடைப் பட்டது.

கந்தபளை கோர்ட்லோட்ஜ் சந்தியில் பிரதான வீதிக்கு மேலாக வெள்ளநீர் பாய்வதால் போக்குவரத்துத் தடைப் பட்டது. சிலவீதிகள் சேதமடைந்துள்ளன.

சில பிரதான வீதி பகுதிகளில் முற்றாக வெள்ளம் சூழ்ந்துள்ளதால் வீதி அருகில் உள்ள வடி கான்களை அவதானிக்க முடியாத நிலையில் மக்கள் விபத்தை எதிர்கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது.

உடபுசல்லாவ, ராகலை, கந்தபளை நகரில் இருந்து நுவரெலியாவுக்குச் செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஏனைய அரச திணைக்களங்களுக்கு அன்றாடம் தங்களின் சேவையைப் பெறச் செல்லும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கந்தபளை பகுதிகளில் சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மரக்கறி தோட்டங்களில் வெள்ளம் பாய்ந்தோடியதால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படாத காரணத்தால் வெள்ளம் ஏற்பட்டு இந்த விவசாய காணிகள் மூழ்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

















# பெரிய குழாயில் ஏற்பட்ட பாரிய வெடிப்பு 24 மணி நேரம் நீர் விநியோகம் பாதிப்பு!

## கொட்டும் மழைக்கு மத்தியில் பணி முன்னெடுத்த ஊழியர்கள்

(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்தியத்துக்கு உட்பட்ட நிந்தவூர் அல்லிமூலை பகுதியில் இருக்கும் பாரிய நீர்க்குழாயில் வெடிப்பு ஏற்பட்டது.

இதனால் நிந்தவூர் காரைதீவு சாய்ந்தமருது பிரதேசங்களில் குழாய் நீர் விநியோகம் புதன்கிழமை 24 மணி நேரம் முற்றாக தடைபட்டிருந்தது.

24 மணி நேரம் அடைமழைக்கு மத்தியில் நீர் விநியோகம் தடைப்பட்டதால் பொதுமக்கள் பலத்த அசௌகரியத்துக்கு ஆளாகினர்.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிரதேசத்துக்குப் பொறுப்பான இயந்திரவியல் பொறியியலாளர் தாமோதரம் விநாயகமூர்த்தி தலைமையிலான ஊழியர்கள் உடனடியாக களத்தில் இறங்கினர்.

குழுவினர் கொட்டும் மழைக்கு மத்தியில் இரவு பகல் பாராமல் அங்கு பணியாற்றியதன் விளைவாக 24 மணி நேரத்தின் பின்னர் குழாய் நீர் விநியோகம் வழமைக்கு திரும்பியது.



# வளத்தாப்பட்டி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(நூருல் ஹுதா உமர் )

இணைந்த கரங்கள் அமைப்பால் பழைய வளத்தாப்பிட்டி சது தமிழ் கலவன் பாடசாலை மற்றும் புதிய வளத்தாப்பிட்டி ஸ்ரீ நாவலர் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளில் உள்ள அதி கஷ்ட குடும்பங்களை சேர்ந்த 100 மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கப்பட்டன.



பாடசாலையின் அதிபர் க.கணேஸ் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ.கஜரூபன், சி.காந்தன் ஆகியோரும் பழைய வளத்தாபிட்டி பாடசாலையின் அதிபர் திருமதி. பு. புஸ்பராணி மற்றும் இலங்கை பிரிட்டிஸ் ஆங்கில கல்லூரி பணிப்பாளர் எஸ். வினோகாந்த், பாடசாலையின் பழைய மாணவர் சங்க உப தலைவர் ரீ.காந்தன், பாடசாலை ஆசிரியர்களான வீ. கௌசல்யா, என். திவியோகராஜா, கே. நிலுஜா உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர், மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# ஸ்ரீலங்கா கராத்தே சம்மேளனத்தின் கிழக்கு மாகாணத்துக்குத் தலைவர்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் ஸ்ரீலங்கா கராத்தே சம்மேளனத்தின் இடைக்கால நிர்வாக சபைக் கூட்டம் மகாவலி கேந்திர நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது ஸ்ரீலங்கா கராத்தே சம்மேளனத்தின் கிழக்கு மாகாணத்தின் தலைவராகவும், யாப்புத் திருத்த குழுவின் உறுப்பினராகவும் சாய்ந்தமருதைச் சேர்ந்த முகம்மத் இக்பால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது கராத்தே நடுவர் சங்க பதிவும் இடம்பெற்றது.



# ஒலுவில் முன்பள்ளி ஆண்டுவிழா

(நூருல் ஹுதா உமர்)

ஒலுவில் அஸ்– சிஹா முன்பள்ளியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வுகள் ஒலுவில் ஜைசா மகளீர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் பெரும் விமர்சையாக நடைபெற்றது.

ஒலுவில் அஸ்– சிஹா முன்பள்ளி பாலர் பாடசாலை தலைமை ஆசிரியையின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று பெரிய ஜும்மா பள்ளிவாசல் மற்றும் அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவருமான எஸ்.எம். சபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வுகளில் கௌரவ அதிதிகளாக மகளிர் கல்லூரி அதிபர் இஸட்.ஏ. கலீல் ரஹ்மான், மினாரா வித்தியாலய அதிபர் எம்.வை.எம். மஜீத், அஸ்ஹர் வித்தியாலய அதிபர் எச். ஜலால்தீன், அக்ஸா வித்தியாலய அதிபர் ஏ.எல்.முக்தார் மற்றும் முன்பள்ளி பாடசாலைகள் பணியகத்தின் முகாமைத்துவ உதவியாளர் ஐ.ஏ. ராசி ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்று மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். பிரதம அதிதியாக கலந்துகொண்ட எஸ்.எம். சபீஸின் சமூகப்பணிகளை பாராட்டி பாடசாலை நிர்வாகத்தினர் கௌரவித்தனர்.

# எண்ணூர் வாயுக் கசிவு முற்றிலும் நிறுத்தம்: ஆலையை மூட வலியுறுத்தி மக்கள் போராட்டம்



”சென்னை - எண்ணூர் பகுதியில் தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய அமோனியா வாயுக் கசிவு முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை” என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

சென்னை ஐ.ஐ.டி. நிபுணர்கள் உள்ளிட்ட தொழில்நுட்பக் குழு ஒன்று அமைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

‘சென்னை, எண்ணூர் பகுதியில், நேற்று முன்தினம் கோரமண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட் என்னும் நிறுவனத்தின் அமோனியா குழாய்களில் ஏற்பட்ட வாயுக் கசிவினால் அருகில் உள்ள பொதுமக்களுக்கு கண் எரிச்சல், மூச்சு விடுவதில் சிரமம் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டன.

சென்னை எண்ணூரில் இயங்கி வரும் கோரமண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட் தொழிற்சாலையில், விவசாயத்துக்குத் தேவையான உரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு அமோனியா திரவம் மூலப்பொருளாகத் தொழிற்சாலையின் வளாகத்தில் சேமிப்புத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் அமோனியா திரவம் அவ்வப்போது வெளிநாடுகளில் இருந்து கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு, எண்ணூரில் அமைந்துள்ள சிறுதுறைமுகத்திலிருந்து உரிய குழாய்கள் மூலமாக இந்தத் தொழிற்சாலையில் உள்ள சேமிப்புத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு, உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு 11-45 மணியளவில் இந்தத் தொழிற்சாலையில் உள்ள குழாய்களில் ஏற்பட்ட அமோனியா வாயுக் கசிவினால், தொழிற்சாலையின் அருகே உள்ள குடியிருப்புப் பகுதிகளில் வசித்துவந்த பொதுமக்களுக்கு கண் எரிச்சல், மூச்சு விடுவதில் சிரமம் போன்ற உபாதைகள் ஏற்பட்டன.

வாயுக் கசிவினைக் கண்டறிந்தவுடன், தகுந்த நிபுணர்கள் உடனே வரவழைக் கப்பட்டு, 20 நிமிடங்களில் அந்தத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வாயுக் கசிவு முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. மேலும், பொலிஸாரும், மாவட்ட நிர்வா கமும் ஒருங்கிணைந்து போதுமான ஆம்புலன்ஸ்களை உடனடியாக ஏற்பாடு செய்து, நிலைமை சரிசெய்யப்பட்டது.

இதனிடையே, எண்ணூர் பகுதியில் அமோனியா வாயு கசிவுக்கு காரணமாக இருந்துவரும் உரத் தொழிற்சாலையை மூட வலியுறுத்தி அப்பகுதி மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அசாம்பவித சம்பவங்களைத் தடுக்க அங்கு பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# உலகத்தலைவர்களை பின்னுக்கு தள்ளி சாதனை படைத்தார் பிரதமர் மோடி



இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் யூடியூப் சனல் 2 கோடி சந்தாதாரர்களை கடந்தது.

இதன்மூலம், உலகத் தலைவர்களின் சனல்களில் அதிக சந்தாதாரர்களைக் கொண்ட யூடியூப் சனல் என்ற சாதனை படைத்துள்ளது.

இந்த சனலில் பதிவேற்றம் செய்யப்பட்ட காணொளிகள் 4.5 பில்லியன் பார்வை யாளர்களை கொண்டுள்ளன.

பிரதமர் மோடியின் யூடியூப் சனலுக்கு அடுத்தபடியாக, பிரேசில் முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவின் யூடியூப் சனல் இரண்டாவது இடத்தில் உள்ளது. அவரது யூடியூப் சனல் மொத்தம் 64 லட்சம் சந்தாதாரர்களை கொண்டி ருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் சனல் 7.89 லட்சம் சந்தாதாரர்களையும், துருக்கி ஜனாதிபதி எர்டோகனின் சனல் 3.16 லட்சம் சந்தாதாரர்களையும் கொண் டுள்ளன.

# இந்தியாவின் அசாமில் நிலநடுக்கம்!

இந்திய மாநிலம் அசாமில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. அசாம் மாநிலம் - தேஸ்பூரில் நேற்று இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் தேஸ்பூருக்கு கிழக்கே 42 கிலோ மீற்றர் தொலைவில் 20 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலமான அசாமில் கடந்த நவம்பர் 8 ஆம் திகதி 4.1 ரிக்டர் அளவிலும் 26 ஆம் திகதி 3.0 ரிக்டர் அளவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்று ரிக்டர் அளவுகோலில் 3.4 ஆகப் நிலநடுக் கமானது பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள் ளது.

நிலநடுக்கத்தால் பொருட் சேதமோ அல்லது உயிர்சேதமோ ஏற்பட்டதாக எந்தவித தகவல்களும் இதுவரை வெளியாகவில்லை.

இந்த மாத தொடக்கத்தில், அசா மின் கௌகாத்தியில் 3.5 ரிக்டர் அள வில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத் தக்கது.

# உக்ரைனுக்கான ஆயுத உதவியை குறைத்துள்ள நட்பு நாடுகள்!



நட்பு நாடுகளிடம் இருந்து குறைந்த அளவிலான ஆயுதங்களே உக்ரைனுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் 2024 ஆம் ஆண்டு உக்ரைனுக்கு மிக மோசமாக இருக்கும் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த ஆண்டு மார்ச் மாதம், ஐரோப்பிய நட்பு நாடுகளிடம் இருந்து ஒரு மாதத்திற்கு 5 லட்சம் குண்டுகளை உக்ரைன் கோரிய நிலையில் அது கிடைக்காததால் ஒரு மாதத்திற்கு வெறும் 110,000 குண்டுகளையாவது வழங்குமாறு கோரியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் ஒரு வருடத்திற்குள் ஒரு மில்லியன் குண்டுகளை உறுதியளித்த நிலையில் ஐரோப்பிய படைகளின் கையிருப்பில் இருந்து நவம்பர் இறுதிக்குள் 300,000 குண்டுகள் வழங்கப்பட்டன என தெரிவிக்கப்படுகின்றது. இது உக்ரைன் கோரியதில் மூன்றில் ஒரு பங்கு என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்யாவும், தான் உற்பத்தி செய்யக்கூடியதை விட அதிகமான குண்டுகளை தயாரித்துள்ளது. இந்த நிலையில் கடந்த செப்டம்பரில் வட கொரியாவின் உதவியையும் ரஷ்யா நாடி இருந்தது.

அதன்படி ஒரு மாதத்திற்குள், வட கொரியா 1,000 கண்டெய்னர்கள் மதிப்புள்ள வெடி மருந்துகளை வழங்கியுள்ளது என வெள்ளை மாளிகை கூறியது.

இதேநேரம் கடந்த ஓகஸ்ட் முதல் வட கொரிய சுதந்திர வர்த்தக மண்டல துறைமுகத்தில் இருந்து ரஷ்யாவின் துனாய் துறைமுகத்திற்கு இடையே பல கப்பல்கள் பயணித்துள்ளன எனவும் ரஷ்யாவில் இராணுவ தளவாடங்கள் இருப்பு அதிகமாக இருக்கலாம் என்றும் வொஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

# பிரபல நடிகர் லீ சன்-கியூன் மர்மமான முறையில் மரணம்!

பரசைட திரைப்பட புகழ் லீ சன்-கியூன் உயிரிழந்த நிலையில் அவரது காரில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொரியாவைச் சேர்ந்த அவர் சியோலில் உள்ள பூங்கா ஒன்றில் இருந்தே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

48 வயதான அவர் தனது உயிரை தானே மாய்த்துக் கொண்டாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை. இந்த நிலையில் இது குறித்த தீவிர விசாரணைகளை அந்த நாட்டுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



லீ சன்-கியூன் ஒஸ்கார் விருது பெற்ற பரசைட் திரைப்படத்தில் நடித்ததன் மூலம் உலகளவில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நிலவில் தரையிறங்கவுள்ள ஜப்பானின் விண்கலம்!

ஜப்பானால் நிலவை ஆய்வு செய்வதற்காக ஏவப்பட்ட ஸ்லிம் விண்கலமானது, வெற்றிகரமாக நிலவின் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நிலவில் பாறைகளை ஆய்வு செய்வது மற்றும் விண்கலத்தை துல்லியமாக தரையிறங்கும் நடைமுறைகளை காண்பிப்பதற்காக, 200 கிலோ எடை கொண்ட விண்கலத்தில் பிளாஸ்டிக் சோலார் பேனல், மிக நுண்ணிய கேமராக்கள், நேனோ டெக்னாலஜியால் சுருக்கப்பட்ட மின்னணு பாகங்கள் பொருத்தப்பட்டு ஸ்லிம் விண்கலம் விண்ணில் கடந்த செப்டம்பர் மாதம் ஏவப்பட்டது.

இந்த விண்கலமானது மோசமான வானிலை காரணமாக 3 முறை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இதையடுத்து கடந்த மாதத்தில் கோஷிமா மாகாணத்தில் உள்ள தனேகஷிமா விண்வெளி மையத்தில் இருந்து விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது.

இது ஜனவரி 20ஆம் திகதி அன்று அதிகாலை நிலவில் தரையிறக்கப்படவுள்ளது. தரையிறங்கலில் திட்டமிடப்பட்டுள்ள துல்லியம் காரணமாக இது 'மூன் ஸ்னைப்பர்' என்றும் அழைக்கப்படுகிறது.

## பாலியாறு - யாழ்ப்பாண குடிதண்ணீர் விநியோகம்:

# விவசாயிகளது நலனைப் பாதிக்காதவாறு செயற்படுத்தப்பட வேண்டியது அவசியம்

### மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜீவன் தொண்டமானுக்கு இன்று அவசரக் கடிதம்

(மன்னார் நிருபர்)

பாலியாற்றில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடி தண்ணீர் கொண்டு போகும் செயற்றிட்டம் ஆரம்பிக்கவுள்ளது. இதனை வரவேற்கின்றோம். ஆனால் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளது நலனுக்கு எதுவித பாதகமும் ஏற்படும் வகையில் இது நீண்ட கால அடிப்படையில் நிகழக் கூடாது.

இவ்வாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நீர் வழங்கல் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு இன்று (28) அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

பாலி ஆற்றில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடி தண்ணீர் கொண்டு போகும் செயற்றிட்டம் ஆரம்பிக்கவுள்ளதை வரவேற்கின்றோம். ஆனால் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளது நலனுக்கு எதுவித பாதகமும் நீண்ட கால அடிப்படையில் நிகழக் கூடாது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த துறைசார்ந்த திணைக்களங்களுடனும் விவசாயிகளுடனும் தீர்க்கமான உரையாடல் மேற்கொள்ளப்படவில்லை. 358 ஹெக்ரெயருக்கு மட்டுமே நீர்ப்பாசனம் வழங்குவதாக தங்கள் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது 513 ஹெக்ரெயர் பயிர் செய்யப்படுவதாக கமநல சேவை திணைக்கள தகவல் தெரிவிக்கின்றது.

தற்போது எட்டுக்குளங்கள் கால போகம், சிறுபோக செய்கைக்குப் பாலியாற்றில் இருந்து நீர் பெறுகின்றன. அதிலும் சிறு போகத்துக்கு ஏழு தொடக்கம், ஒன்பது தடவைகள் நீர் நிரப்ப வேண்டும். மழை குறைந்த காலத்தில் தாங்கள் அமைக்க இருக்கும் நீர்த்தேக்கத்தில் இருந்து எப்படி நீரை விடுவிப்பீர்கள். குடிநீருக்கா? அல்லது விவசாயத்துக்கா? முதன்மைப்படுத்துவது எனும் நிலை உருவாகும்.

இவ்வருட சிறுபோகத்தில் கடம்பன் குளம் விவசாயிகளுக்கும் காரையன் கண்ணாடி விவசாயிகளுக்கும் பாலியாற்று நீர்ப் பகிர்வில் பெரும் பிரச்சினை உருவாகியது. இது மாத்திரமன்றி கோடை காலத்தில் பாலியாற்று நீர் வராவிட்டால் நிலத்தடி நீர் குறைவடையும். அதனால் பாலியாற்றுக் கரையின் இருபுறமும் உள்ள மேட்டுநிலச் செய்கை விவசாயம் முழுமையாக பாதிக்கப்படும்.






அதனால் அவர்களுக்குப் பெரும் வாழ்வாதார இழப்பு ஏற்படும் என்று அஞ்சுவதாக எம்மிடம் கூறுகின்றனர்.

தற்போது உள்ள வயல் காணியை விட மேலும் சில ஆண்டுகளில் ஆயிரம் ஏக்கர் வரையில் விவசாய நிலம் அதிகரிப்பதற்கான ஏது நிலை காணப்படுவதாகவும் அதற்கு நீர் பெறுவது எவ்வகையில் என்று கேள்வி எழுப்புகின்றனர்

பாலியாற்றில் மழை காலத்தில் கடலுக்குள் கலக்கும் உபரிக் கொண்டு நீரை யாழ்ப்பாணத்துக்கான குடி தண்ணீர் திட்டம் உருவாக்குகிறோம். இந்த நிலையில் தமது வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுவிடுமோ என்று அந்தப் பகுதி விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

எனவே இந்தத் திட்டம் தொடங்குவதற்கு முன்னதாக துறைசார்ந்த திணைக்களங்கள் விவசாய அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோருடன் அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல் மேற்கொண்டு இவற்றுக்கு தீர்வு காணுதல் அவசியமாகும்.

இதற்கு மாறாக அதிகாரிகள் தான் தோன்றித்தனமாக செயற்படுத்த முனைந்தால் அதன் விளைவு விபரிதமாகும். இரணைமடு குடி தண்ணீர் விவகாரம் போல் நிகழலாம் என்பதையும் முன்னெச்சரிக்கையுடன் அறியத் தருகின்றோம்.– என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதியின் செயலாளர், மன்னார் அரச அதிபர், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், வெள்ளாங்குளம் கமக்காரர் அமைப்புத் தலைவர், ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



# கடல்சார்ந்த பாரம்பரியமும் இலட்சிய உறுதியும் தலைவர் பிரபாகரனுக்குப் பேராண்மை தந்தன!

## கடற்கோள் நினைவு நாளில் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

கடல் வாழ்க்கை நில வாழ்க்கையை விடச் சவால்கள் நிறைந்தது. கடலில் போனால் திரும்பி வருவோமா என்று தெரியாத நிச்சயமற்ற வாழ்க்கை மரண பயத்தை அறவே இல்லாததாக்கியது. சூறைக் காற்றுக்கும் கொந்தளிக்கும் அலைகளுக்கும் எதிராக மேற்கொள்ளும் பயணம் பெரும் பயிற்சியாக அமைந்து உடலையும் மனதையும் வலுவாக்கியது.

நிச்சயமற்ற வருவாய், பொருள் இழப்புக் குறித்த கவலையை இல்லாமல் ஒழித்தது. இக்கடல்சார் பாரம்பரிய குணவியல்புகளுடன் இலட்சிய உறுதியும் சேர்ந்து தலைவர் பிரபாகரனுக்குப் பேராண்மையைப் பெற்றுத் தந்தன.

அவரால் கடலையும் நிலத்தையும் குறிப்பிட்ட காலம் வரையிலேனும் கட்டிக்காக்க முடிந்தது. இன்று அவர் இல்லை என்று கூறப்படும் நிலையில் சூறையாடப்படும் கடலைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு நெய்தல் நில மக்களிடமே உள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் கடற்கோள் நினைவுநாள் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை (26) மாதகல் விநாயகர் இறங்குதுறையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பூமியின் வெப்பநிலை மிக உயர்வாக இருந்த ஆண்டாக நடப்பு 2023 ஆம் ஆண்டு பதிவாகி உள்ளது. வரவிருக்கும் 2024 ஆம் ஆண்டில் பூமியின் வெப்பநிலை கைத்தொழில் புரட்சி ஆரம்பமானபோது இருந்ததை விட 1.5 பாகை செல்சியஸ் அளவில் உயரும் என்று விஞ்ஞானிகளால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இது பூமியின் காலநிலையில் கடுமையான மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது. பூமி சூடாகுவதால் கால நிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களால் நாம் ஏற்கனவே ஒருபுறம் கடும் மழையும் வெள்ளப் பெருக்கும், இன்னொருபுறம் கடும் வரட்சி, பனிமலைகளின் உருகுதல், கடல்மட்ட உயர்வு, பயிர்உற்பத்திபாதிப்பு,உயிரினங்களின் அழிவு என்று பல பாதகங்களை அனுபவிக்க ஆரம்பித்துவிட்டோம்.

பூமியின் காலநிலையில் நிலத்தைவிட கடல் ஆற்றுகின்ற பங்களிப்புப் பெரியது. பூமியின் மீது சூரியனில் இருந்து வீழுகின்ற வெப்பத்தின் பெரும் பகுதியைக் கடல்தான் உறிஞ்சி வைத்திருக்கிறது.

உறிஞ்சிய வெப்பத்தைச் சமுத்திர நீரோட்டங்களின் மூலம் பூமி முழுவதும் சமனாகப் பரவச்செய்கிறது. பூமியைச் சூடுபடுத்தும் கரியமில வாயுவைத் தன்னுள் ஈர்த்துக் கரைத்துவைத்திருக்கும் மிகப்பெரும் காபன் தொட்டியாகச் செயலாற்றுகிறது.

கடல்தான் பூமியின் சூட்டைத் தணிவிக்கும் மழை பொழிவதற்குக் காரணமாகவும் உள்ளது. ஆனால் கடலின் இருப்பும் உயிர்ப்பும் தான் எமது இருப்பும் உயிர்ப்பும் என்று தெரியாத நாம் கடலை மெல்ல மெல்லச் சாகடித்துக் கொண்டிருக்கிறோம்.

எமது பொருத்தமற்ற மீன்பிடி முறைகளாலும் அளவுக்கு அதிகமான மீன்பிடியாலும், கடலட்டை வளர்ப்புப் போன்ற ஒற்றையினப் பண்ணைகளாலும் கடலில் மீன் இனங்கள் அழிந்து வருகின்றன. இன்று கடலில் மீன்களை விடப் பிளாஸ்ரிக் துகள்களே அதிகமாகக் காணப்படுகின்றன. கடலில் அதிக அளவில் பிளாஸ்ரிக்கைத் தள்ளிக் கொண்டிருக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 14 ஆவது இடத்தில் உள்ளது.

கடலை எமது கழிவுகளைக் குவிக்கும் ஒரு குப்பைத் தொட்டியாகவே நாம் பாவித்துக் கொண்டிருக்கின்றோம். சூழல் மாசுபாட்டால் ஒட்சிசன் குறைவு ஏற்பட்டுப் பல இடங்களில் கடல் இறக்கத் தொடங்கியுள்ளது என்று கடலியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

கடல்தான் காநிலை மாற்றுப் பாதகங்களைத் தடுக்கும் கேடயம் என்பதை உணர்ந்து கடற்சூழற் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். கடலைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அனைத்து மக்களுக்கும் உண்டு. ஆனாலும் கடலின் பங்காளிகளான, கடலையே வாழ்வாதாரமாகக் கொண்ட கடற்றொழிலாளர்களுக்கு இந்தக் கடப்பாடு அதிகமாகவே இருக்கிறது. அதற்கான பட்டறிவும், பராக்கிரமும் இவர்களிடம்தான் அதிகளவில் இருக்கிறது.

கடற்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அவசரப் பணியாக விரைந்து மேற்கொள்வதே பூமியில் எமது இருப்புக்கான உத்தரவாதமாக அமையும். இதுவே, கடற்கோளில் பலியான எம் உறவுகளுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகவும் இருக்கும்.- என்றார்.



# மாரவில - மூகுதுகடுவ கடலில் காணாமல் போன மாணவன்!

(ரஸீன் ரஸ்மின்)

மாரவில - மூகுதுகடுவ கடலில் குளிப்பதற்காகச் சென்ற பாடசாலை மாணவர்கள் நான்கு பேரில் ஒருவர் அலையில் சிக்கிய நிலையில் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (27) மாலை கடலில் நான்கு மாணவர்கள் குளிப்பதற்காக சென்றுள்ளனர்.

இந்த நிலையில், மாணவர்கள் நால்வரும் குளித்துக் கொண்டிருந்த போது அந்த நால்வரும் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மீனவர்கள் மற்றும் சிலர் இணைந்து அவர்களில் மூவரைக் காப்பாற்றியுள்ளனர். ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று மாரவில தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அலையில் தத்தளித்துக் கொண்டிருந்த நான்கு மாணவர்களில் மூவரை மீட்டு கரைக்குக் கொண்டு வந்த போதிலும், ஒரு மாணவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது.

காணாமல்போன மாணவனைத் தேடும் நடவடிக்கைகளில் பொலிஸார், கடற்படையினருடன் மீனவர்களும் இணைந்துள்ளனர்.



# கோட்டைக் கல்லாறு கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ள மர்மப் பொருள்!

(அஸ்ஹர் ஆதம்)

மட்டக்களப்பு கோட்டைக் கல்லாறு கடற்கரையில் மர்மப் பொருளொன்று கரை ஒதுங்கியுள்ளது.

மட்டக்களப்பு கோட்டைக் கல்லாறு கடலில் நேற்று (27) புதன்கிழமை மாலை மர்மப் பொருள் ஒன்று மிதந்துள்ளதை அங்குள்ள மீனவர்கள் அவதானித்துள்ளனர்.

இந்நிலையில் அப்பொருள் இன்று வியாழக்கிழமை (28)காலை கரை ஒதுங்கியுள்ளது என்று மீனவர்கள் தெரிவித்தனர் .

இந்தப் பொருள் சிவப்பு நிறத்தில் கூம்பக வடிவில் போத்தல் போன்று பெரியதாக அமைந்துள்ளது. பொருளின் மேற்பகுதியில் பி.எம்.ரி. எனவும் பின்பக்கம் பி என்ற எழுத்தும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன.

இந்தப் பொருளில் ஒரு பக்கம் சிறியரக டயர் ஒன்று பொருத்தப்பட்டு அதில் இரும்பினாலான சங்கிலியும் பொருத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கரை ஒதுங்கியுள்ள பொருள் என்ன என்பது தமக்குத் தெரியாது என்று மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனை களுவாஞ்சிகுடி பொலிஸாரும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர் என்று அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் புல்மோட்டைப் பிரதே கடற் பகுதியிலும் இதுபோன்ற பொருள் கரை ஒதுங்கியது என்று தெரிவிக்கப்படுகிறது.